# ரெய்டுகள்; கைதுகள்; மிரட்டல்கள் - பி.ஜே.பி.க்கு கற்பித்த பாடங்கள்!

ஒரு காலத்தில் வருமான வரித்துறை ரெய்டு, அமலாக்கத்துறை ரெய்டு, சி.பி.ஐ. சோதனை என்றால் அதற்கு ஆட்பட்டவர்கள் அங்கலாய்த்து, வெலவெலத்து முகமெல்லாம் வெளிறிப் போய் நிற்பார்கள். ஆனால் இப்போதெல்லாம் அந்த நிலை மாறி வருகிறது.

**“தெரியுமா என் வீட்டில் ரெய்டு. உறவினர்கள், நண்பர்கள் வீடுகள் என ஏகப்பட்ட இடங்களில் சோதனை. நூற்றுக்கணக்கான அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்” - என சோதனைக்குள்ளானவர்கள் பெருமிதம் கொள்ளுமளவு பி.ஜே.பி. அரசு இந்த ரெய்டுகளை கொச்சைப்படுத்திவிட்டது.**

இந்த ஏஜன்சிகள், ஒருவர் இல்லத்திலோ, அலுவலகத்திலோ நுழைந்துவிட்டால் அதனை அவமானமாகக் கருதிய நிலை மாறி, இவைகள் சோதனைக்கு வந்தால் தங்களுக்கு சமூக அந்தஸ்து கிடைக்கும், மக்களின் அனுதாபம் கட்சித் தலைமையின் கரிசனப் பார்வைத் தங்கள் மீது விழும், தங்களை அரவணைக்கும் என்ற எண்ணத்தில் இந்த அமைப்புகளின் வருகைக்காக பல அரசியல்வாதிகள் காத்திருக்கும் நிலை உருவாகியுள்ளது. இந்த ஏஜன்சிகள், அதாவது வருமான வரித்துறை, சி.பி.ஐ., அமலாக்கத்துறை போன்ற ஏஜன்சிகளை, Laughing Stock அதாவது சிரிப்புப் பொருளாக ஆக்கிவிட்டது பா.ஜ.க. அரசு!

வருமான வரித்துறை, சி.பி.ஐ., அமலாக்கத்துறை சோதனைகளுக்கு பிறகு, இந்த ரெய்டில் பல ஆவணங்களைச் சோதனை நடத்தியோர் கைப்பற்றிச் சென்றதாக ஊடகங்கள் உடனடியாகவும், ஏடுகள் மறு நாளும் செய்திகளை அறிவிக்கும், அவ்வளவுதான்!

யார் வீட்டில் ரெய்டு நடந்தாலும், அந்த ரெய்டில் கட்டுக்கட்டாக 2000 ரூபாய் நோட்டுகள், 500 ரூபாய் நோட்டுகள் சிக்கியதாக நெட்டிசன்கள் கட்டுகட்டாக கட்டி வைத்திருக்கும் பணக்குவியலை வெளியிட்டு செய்தி பரப்பிடுவர்! இராமன் வீட்டில் ரெய்டு நடந்திருந்தாலும் அதே கட்டுகள், இராவணன் வீட்டில் ரெய்டு நடந்த செய்தி வந்தாலும் அதே நோட்டுக் கட்டுகளைக் காட்டி ஒட்டிவெட்டும் கலையில் தங்களுக்குள்ள 'திறமை (!) யை காட்டி மகிழ்வர்!' இதெல்லாம் பொதுமக்கள் பார்த்து ரசிக்கும் வாடிக்கையான வேடிக்கைகள்!



கருநாடகத்தில்

**கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் தரப்பட்ட பதிலின் அடிப்படையில், அதற்கு முன்பான 7 ஆண்டுகளில் (பி.ஜே.பி. ஆட்சியில்) அதாவது 2014க்கும் 2022க்கும் இடைப்பட்ட காலத்தில் அமலாக்கத்துறை 3010 சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. அதாவது அமலாக்கத்துறை பி.ஜே.பி. ஆட்சியில் அதற்கு முன்பு இருந்த அரசில் நடந்ததை விட 27 மடங்கு அதிகமாக இந்தச் சோதனைகளை நடத்தியுள்ளது!**

**அதேபோல அந்நியச் செலாவணி அத்துமீறல் தொடர்பாக 22,320 வழக்குகளை பதிவு செய்துள்ளதாகவும் கூறப்பட்டது.**

3010 ரெய்டுகள் நடத்திய அமலாக்கத்துறை 888 வழக்குகள் பதிவு செய்து நடத்தியது. கடந்த 10 ஆண்டுகளில் நடந்த அந்த 888 வழக்குகளில் 23 வழக்குகளில்தான் தண்டனை பெற்றுத்தர முடிந்ததாக ஒரு அதிகாரபூர்வ புள்ளிவிபரம் கூறுகிறது. அதாவது 1 சதவீதம் பேரின் வழக்கைக் கூட நிரூபிக்க இயலவில்லை. 0.5 சதவீதத்துக்குக் கீழேதான் தண்டனை பெற்றுதர முடிந்தது.



டெல்லியில்

**பி.ஜே.பி. ஆட்சியில் அரசியல் கட்சித் தலைவர்கள் மீது 1500 வழக்குகள் அமலாக்கத் துறையால் பதிவு செய்யப்பட்டது. ஆனால் 9 பேர் வழக்கை மட்டும்தான் நிரூபிக்க முடிந்துள்ளது.**

**இவை எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர்களை, பி.ஜே.பி.க்கு அடிமை சாசனம் எழுதித்தர மறுப்பவர்களுக்கு எதிராக அவர்களை மிரட்டி பணியவைக்க பி.ஜே.பி. பயன்படுத்தும் ஆயுதங்கள். ஊடகங்களுக்கு ஓரிரு நாட்கள் தலைப்புச் செய்திகள்! அவ்வளவு தான்!**

தலைநகர் டெல்லியில் கடந்த 2020ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் டெல்லி ஆட்சியை எப்படியும் கைப்பற்றி விட வேண்டும் என்ற முனைப்போடு, ரத, கஜ, துராக பதாதிகள் சகிதம் களத்தில் இறங்கியது பி.ஜே.பி. ! பிரதமர் மோடி ஒருபக்கம், அமித்ஷா மறுபக்கம், என டெல்லி மாநகரின் தெருத் தெருவாக சுற்றி வாக்கு சேகரித்தனர். நாட்டினை ஆளும் கட்சியால் நாட்டின் தலைநகரை கைப்பற்ற முடியவில்லை என எல்லாரும் ஏளனமாகப் பார்ப்பதாக எண்ணி எப்படியும் டெல்லி மாநில ஆட்சியை கைப்பற்றுவது என்று முழு மூச்சுடன் இறங்கியது பி.ஜே.பி.!

ஒன்றிய அரசின் பரிபாலனத்தை நடத்திடும் அமைச்சர்கள் முதல் அதிகாரிகள் வரை குடியிருக்கும் தலைநகரின் ஆட்சி நாற்காலி பி.ஜே.பி.யிடம் இல்லாதது இழுக்கு மட்டுமல்ல; வெட்கக்கேடு என்ற நிலையில்மோடி - அமித்ஷா ஜோடியின் பிரச்சாரம் அங்கே முடுக்கப்பட்டது.

தேர்தலுக்கு முன் 5300 பேரணிகளை பி.ஜே.பி. நடத்தியது. அமித்ஷா 60 தொகுதியிலும், நட்டா அங்கு மொத்தமுள்ள 70 தொகுதிகளிலும் தொடர் பிரச்சாரம் மேற்கொண்டனர்! பி.ஜே.பி. ஆளும் மாநில முதல்வர்கள், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரச்சாரம், பிரபல நட்சத்திரங்கள் ஹேமமாலினி, நடிகர் சன்னி தியால், கிரிக்கெட் வீரர் கவுதம்கம்பீர் போன்றோரை பி.ஜே.பி. களத்தில் இறக்கி ஆட்சியைப் பிடிக்க பகீரத பிரயத்னங்களில் ஈடுபட்டது. ஆனால் 'ஆம் ஆத்மி' கட்சி அத்தனை சக்திகளையும் தவிடு பொடியாக்கி வெற்றி கண்டது. மொத்தமுள்ள 70 தொகுதிகளில் 62 தொகுதிகளை கைப்பற்றியது.

**தோல்வியில் துவண்ட பி.ஜே.பி. ஆம் ஆத்மி கட்சியை எப்படியும் நசுக்கிவிட வேண்டும் எனத் திட்டமிட்டது! ஆம் ஆத்மிக்கு அந்த கட்சியின் வெற்றிக்குக் காரணமாக கருதியவர்கள்மீதுசி.பி.ஐ.,வருமானவரித்துறை, அமலாக்கத்துறைகளை ஏவிவிட்டது! தேர்தல் முடிந்தபிறகு மூன்று மாத காலத்தில் 500 ரெய்டுகள் ஆம் ஆத்மி ஆதரவாளர்கள் வீடுகள், அலுவலகங்களில் நடத்தப்பட்டுள்ளதாக டெல்லியின் முதலமைச்சர் கெஜ்ரிவால் குறிப்பிடுகிறார்! ஒன்றிய அரசாங்கம் நடத்திடும் இந்த அசிங்க அரசியலை (Dirty Politics) கண்டித்துள்ளார்!**

டெல்லியின் துணை முதலமைச்சர் சிசோடியாவின் அலுவலகத்திலேயே சி.பி.ஐ. சோதனை நடந்துள்ளது.

இப்படி எல்லாம் ஆம் ஆத்மி ஆட்சியின் துணை முதல்வர் வீடு, அலுவலகங்களில் சோதனை, மற்றொரு அமைச்சர் மீது ஊழல் புகார் சுமத்தி கைது என்றெல்லாம் அவப் பெயர் உருவாக்கியபின் டெல்லியின் மாநகராட்சி தேர்தலை டெல்லி சந்தித்தது. டெல்லியின் மூன்று நகராட்சிகளை ஒன்றாக்கி தேர்தலை நடத்தினர்! மூன்று நகராட்சிகளை ஒன்றாக்கியதன் நோக்கம் டெல்லி அரசுக்கு எதிராக அதற்கு சமமாக மாநகராட்சியை உருவாக்கி ஆள வேண்டும் என்று எண்ணிய பி.ஜே.பி. தேர்தலுக்கு முன் ஆம் ஆத்மி கட்சியின் 'இமேஜை' நசுக்க, சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருமான வரித்துறைகளை பயன்படுத்தியது. அவைகளும் தங்கள் வேலைகளைக் காட்டி ஆம் ஆத்மி ஆட்சியாளர்களை மிரட்டின!

**ஆளும் கட்சி மிரளும், மக்களிடம் அவப் பெயர் உருவாகும் என்ற நோக்கில் செயல்பட்ட பி.ஜே.பி.யின் செயல்பாட்டில் ஆம் ஆத்மி மீது மக்களுக்கு அனுதாபமே உருவானது! முடிவு பி.ஜே.பி. தோல்வி கண்டது! டெல்லி மாநிலத்தை மட்டுமல்ல; மாநகராட்சியையும் ஆம் ஆத்மி கைப்பற்றி பி.ஜே.பி.யின் ஆணவ அதிகாரத் திமிர் கொண்ட அரசியலுக்கு மரண அடி தந்தது.**

அதிலும் பி.ஜே.பி. பாடம் பெற்றதாகத் தெரியவில்லை!

அதேபோல, கருநாடக மாநிலத்தில் சமீபத்தில் நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசை எப்படியும் வீழ்த்தி, பா.ஜ.க.வின் ஆட்சியைத் தக்க வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், 2020ஆம் ஆண்டு இறுதியிலேயே செயல்படத் துவங்கியது பி.ஜே.பி.! கருநாடக மாநில காங்கிரசின் செல்வாக்கு மிக்க தலைவர்களில் ஒருவரான டி.கே.சிவக்குமாரை அடக்கி ஒடுக்கி விட்டால் காங்கிரஸ் இயக்கம் நிலை குலைந்து விடும் என பி.ஜே.பி.யால் கணக்குப் போடப்பட்டது!

கருநாடக மாநில காங்கிரஸ் தலைவராக செயல்பட்ட அவர் மீது சி.பி.ஐ. ஏவி விடப்பட்டது! வருமானத்துக்கு மீறி சொத்து சேர்த்த வழக்கு என்று கூறி டி.கே. சிவக்குமார், அவரது தம்பி சுரேஷ் எம்.பி. மற்றும் அவரது ஆதரவாளர்கள் 14 பேர்களுக்கான மனை, அலுவலகங்களில் சி.பி.ஐ. சோதனை நடத்தியது. அவை ஏடுகளிலும் ஊடகங்களிலும் பெரிதுபடுத்தப்பட்டன. நடந்து முடிந்த தேர்தலுக்கு முன் அமலாக்கத் துறையால் அலைக் கழிக்கப்பட்டார் டி.கே.சிவக்குமார்!

காங்கிரசின் இளம் தலைவர் ராகுல் காந்தி கருநாடக மாநிலத்தில் ஒற்றுமைப் பயணம் மேற்கொண்ட போது, அவருடன் அந்த மாநில காங்கிரஸ் தலைவர் கலந்து கொள்ள இயலாமல் செய்ய அந்தத் தினத்தில் டெல்லி அமலாக்கத் துறை அலுவலகத்துக்கு டி.கே.சிவக்குமார் வருகை தரவேண்டும் என்று சம்மன் அனுப்பப்பட்டது. இந்த வழக்குக்குத் தொடர்பாக 2020 அக்டோபர் மாதம் டி.கே.சிவக்குமார், உறவினர், நண்பர்கள் இல்லங்களில் 'ரெய்டு' நடத்தப்பட்டது. சிவக்குமார் குடும்பத்தார் நடத்திய கல்லூரியில் அதே ஆண்டு டிசம்பர் மாதம் ரெய்டு நடத்தப்பட்டது. டி.கே.சிவக்குமாரின் மகளையும் அழைத்து சி.பி.ஐ. விசாரித்து மிரட்டியது. இந்த ரெய்டுகளின் நோக்கம் தேர்தலில் காங்கிரஸ் இயக்கத்தை முடக்க வேண்டும் என்பதே என எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டன!

2019ஆம் ஆண்டு அதே டி.கே. சிவக்குமார் மீது பண பரிமாற்ற (Money Laundering) வழக்குக் தொடர்ந்து, அவரை கைது செய்தது! 2019 செப்டம்பர் 3ஆம் தேதி பண பரிமாற்ற வழக்கில் கைது செய்யப்பட்ட டி.கே.சிவக்குமார் ஏறத்தாழ 1 மாதக் காலம் சிறைவாசம் அனுபவித்த பின் டெல்லி உயர்நீதிமன்றத்தில் ஜாமீன் பெற்று வெளியே வந்தார்.

இப்படி பி.ஜே.பி. அரசின் ஏஜன்சிகளாக செயல்படும் வருமான வரித்துறை, சி.பி.ஐ., அமலாக்கத்துறை என அத்தனை துறைகளையும் டி.கே.சிவக்குமார் மீது ஏவிவிட்டு அவரை மிரட்டப் பார்த்தது! எதற்கும் அஞ்சாது நின்றார் டி.கே.சிவக்குமார்! பி.ஜே.பி. ஆட்சி நடத்திய தாக்குதல்களினால் அவர் மீது மக்கள் அனுதாபம் பெருகியது!

**நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் அவரை எப்படியும் தோற்கடிக்க வேண்டும் என்று, அவர் வகுப்பைச் சேர்ந்த பி.ஜே.பி.யின் அமைச்சர் அசோக் என்பவரை சிவக்குமாருக்கு எதிராக களத்தில் இறக்கியது பி.ஜே.பி.! முடிவு மக்களின் பேராதரவோடு, எதிர்த்து நின்ற பி.ஜே.பி. அமைச்சர் டெபாசிட்டை பறிகொடுத்த நிலையில் வெற்றி கண்டார் டி.கே.சிவக்குமார்! கருநாடக மாநில புதிய அரசில் அவர் துணை முதல்வர்!**



மேற்கு வங்கத்தில்

கடந்த 2021ஆம் ஆண்டு நடந்த மேற்கு வங்கத் தேர்தலுக்கு முன்பும் ஒன்றிய பி.ஜே.பி. அரசு, சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருமான வரித்துறைகளை வைத்து, மம்தா பானர்ஜியின் அரசுக்கு அவப்பெயர் உருவாக்கிடும் வேலைகளில் ஈடுபட்டது. மிரட்டல் பாணியில் பல ரெய்டுகளை மேற்கொண்டது. தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன் முதலமைச்சர் மம்தா பானர்ஜியின் மருமகனும், திரிணாமுல் காங்கிரஸ் இயக்கத்தின் இரண்டாம் தளபதி எனக் கருதப்பட்டவருமான அபிசேக் பானர்ஜி சி.பி.ஐ. சோதனைக்கு ஆளானார்.



**சிலந்தி**

பழைய வழக்குகளை எல்லாம் தோண்டி எடுத்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் வீடுகளில் ரெய்டு, கைது என சி.பி.ஐ. அமலாக்கத் துறைகளை வைத்து ஒரு பெரும் ருத்ரதாண்டவங்களை நடத்தி எப்படியும் தேர்தலில் வெற்றி ஈட்ட நினைத்தது பி.ஜே.பி.!

**முடிவு: பி.ஜே.பி.யின் தலையில், இடியை இறக்கினர் மேற்கு வங்க மக்கள்! மம்தா பானர்ஜி மீண்டும் முதல்வராகப் பணியைத் தொடர்ந்தார்! இத்தனை சம்பவங்களிலிருந்தும் பி.ஜே.பி. பாடம் பெற்றதாகத் தெரியவில்லை!**

**டெல்லி மாநகராட்சித் தேர்தல் முடிவு, பஞ்சாப் மாநிலத் தேர்தல் முடிவு, மேற்குவங்க மாநிலத் தேர்தல் முடிவு, ஹிமாசலப் பிரதேசத் தேர்தல் முடிவு, சமீபத்தில் நடந்த கருநாடக மாநிலத் தேர்தல் முடிவு என வந்து கொண்டிருக்கும் தேர்தல் முடிவுகள் மூலம் ஒன்றியத்தில் பி.ஜே.பி. ஆட்சிக்கு முடிவு காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து எதிர்க்கட்சிகளை ஒடுக்கி ஆள நினைக்காமல் மக்களின் நன் மதிப்பைப் பெற்றிட இனியாவது பி.ஜே.பி. முயற்சி செய்வது நல்லது!**